## தாழையூத்து ஊராட்சித் தலைவி தாக்கப்பட்ட சம்பவம்

# சென்னையில் செப். 7 அருந்ததியர்கள் பேரணி

சென்னை, ஆக. 9: தாழ்த்தப்பட்ட ஊராட்சித் தலைவர்கள் மீதான தாக்குதல்கள், படுகொலைகளைத் தடுத்து நிறுத்தக் கோரி செப்டம்பர் 7-ம் தேதி சென்னையில் பேரணி நடைபெறுகிறது.

இது தொடர்பாக ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் இரா. அதியமான், அருந்தமிழர் விடுதலை இயக்கத் தலைவர் ஐக்கையன், தமிழ்நாடு சாக்கியர் அருந்ததியர் சங்கத் தலைவர் மதிவண்ணன் ஆகியோர் சென்னையில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது:

திருநெல்வேலி மாவட்டம், வடக்கு தாழையூத்து ஊராட்சியில் அருந்ததியர் இனத்தைச் சேர்ந்த கிருஷ்ணவேணி என்ற பெண் தலைவராக உள்ளார்.

இவர் மீது கடந்த ஜூன் 13-ம் தேதி மாற்று சாதிக்காரர்கள் நடத்திய கொலை வெறித் தாக்குதலில் படுகாயமடைந்து, தற்போது உயிருக்கு ஆபத்தான நிலையில் அவர் சென்னையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இப்போது வரை அவரது உடல் நிலைமை கவலைக்கிடமாகவே உள்ளது. அவரது இடது கை செயலிழந்த நிலையில் உள்ளது.

எனவே, தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த பெண் ஊராட்சித் தலைவரான அவரது உயிரைக் காப்பாற்றும் வகையில் அவருக்கு சிறந்த மருத்துவ சிகிச்சை அளிக்க தமிழக அரசு முன்வர வேண்டும்.

மேலும், அவருக்கு அரசு நிவாரணமாக ரூ.10 லட்சம் அளிக்க வேண்டும்.

சாதி வெறியின் காரணமாக ஊராட்சித் தலைவர் கிருஷ்ணவேணி மீது தாக்குதல் நடத்தியவர்களை உடனடியாகக் கைது செய்ய வேண்டும்.

தாழ்த்தப்பட்ட ஊராட்சித் தலைவர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் அதனால் ஏற்படும் படுகொலைகளை தடுத்து நிறுத்த தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மேலும், தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு ஒதுக்கப்படும் ஊராட்சிகளில் தலைவர் மட்டுமின்றி, துணைத் தலைவர் பதவியும் அந்தப் பிரிவினருக்கே ஒதுக்கப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அருந்ததியர் இன மக்கள் கலந்து கொள்ளும் பேரணி செப்டம்பர் 7-ம் தேதி சென்னையில் நடைபெறும் என்று அவர்கள் தெரிவித்தனர்.